செ.வெ.எண்: 602 நாள்: 17.09.2019

# வருவாய்த் துறையினர் பொது மக்களுக்கு சான்றிதழ்களை விரைவாக வழங்கவேண்டும்.

## புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அலுவலக ஆய்வு பணியின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் இன்று (17.09.2019) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழக அரசின் வருவாய் துறையின் சார்பில் பொதுமக்களுக்கு தேவையான பல்வேறு சான்றிதழ்கள் வழங்குதல், நலத்திட்ட உதவிகள் வழங்குதல் போன்ற பல்வேறு முக்கிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் 4 பயனாளிகளுக்கு ரூ.48,000 மதிப்பீட்டில் முதியோர் உதவித் தொகைக்கான ஆணைகளும், ஒரு பயனாளிக்கு ஆதரவற்றோர் விதவை சான்றிதழும், 2 நபர்களுக்கு இறப்பு சான்றிதழ்களுக்கான ஆணைகளும் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தடை ஆணை பதிவேடு, பிறப்பு, இறப்பு சான்றிதழ் பதிவேடு, பட்டா மாறுதல் மேல் முறையீடு பதிவேடு, தகவல் அறியும் உரிமை சட்ட மனுக்கள் பதிவேடு, சாதிச்சான்றிதழ் சரிபார்த்தல் பதிவேடு போன்ற பல்வேறு பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் வைப்பறையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வில் ஆவணங்களை முறையாக பராமரிக்கவும், பொது மக்களுக்கு தேவையான பல்வேறு சான்றிதழ்களை தாமதமின்றி விரைவாக வழங்கவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது வருவாய் கோட்டாட்சியர் தண்டாயுதபானி, வட்டாட்சியர்கள் பரணி, பொன்மலர், ராஜேஸ்வரி உள்ளிட்ட தொடர்புடைய பலர் உடனிருந்தனர்.

---------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**